## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்
## வினா விடை நேரம்

## வினா எண் 320
## தலைப்பு "பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பற்றி கூறப்படும் தவறான போலி வாதங்கள்"

## நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் இரண்டு பக்கம் 360-366லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:
ஸ்வாமி எங்களுக்கு பல முக்கிய விஷயங்களை புரிந்து கொள்ள அறிவு போதவில்லை.ஆன்மீகம் பற்றியும் அரைகுறையாகவே தெரிந்து வைத்துள்ளோம்.இதனால் பல சமயங்களில் நாங்கள் அரைகுறை அறிவால் தெய்வீகத்தையே சந்தேகிக்கிறாம்.
தெய்வீகத்தின் மீதே பழி போட்டு தூற்றுகிறோம்.
மஹாபாரதத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பாரபட்சமாக பாண்டவர்களுக்கு சாதகமாக நடந்து கொண்டதாக நினைக்கின்றோம்.
துரோணாச்சாரியார் பீஷ்மாசாரியார் ஸ்கந்தவன் என்று பலரின் மரணத்திற்கு காரணமாக இருந்தது  என பல உதாரணங்கள் சொல்லலாம்.
இவற்றையெல்லாம் தெளிவு படுத்தி எங்கள் அறியாமயை தயவு செய்து போக்கி அருளுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
கடவுள் குறை ஒன்றும் இல்லாதவர்.
மாசுமருவற்றவர்
கடவுளிடம் குறை காண்பது கொடிய பாவமாகும்.கடவுளின் ஒவ்வொரு செயலும் தன்னலமற்றது.அவரது ஒவ்வொரு நடவடிக்கையும் மனித குலத்தின் நன்மைக்கே.கடவுள் எப்போதும் பிறருக்கு கொடுப்பவரே அன்றி பெறுபவரல்ல.
தனக்கு என்று எதையும் வைத்து கொள்ளாதவர்.
கலியின் தாக்கத்தினால் இன்றைய மனிதர்கள் குறுகிய சுய நல மனப்பான்மையுடன் அமைதி இழந்து பதட்டத்துடன் இருக்கிறார்கள்.
தனது தாய் தந்தையையும் கூட கைவிட்டு அரக்கர்களை போல் வாழ்வதால் அவர்களால் தெய்வீகத்தை உணர முடியவில்லை.
கௌரவர்கள் வாழ் நாள் முழுவதும் கொடியவர்களாக அறம் தவறி சத்தியத்திற்கெதிராக நெறியற்ற வாழ்க்கை வாழ்ந்தனர்.
பொறாமை வெறுப்பு பேராசை இவைகளால் உந்தப்பட்டு பாண்டவர்களுக்கு விஷம் கொடுத்தது அவர்கள் இரைப்பிடத்தை தீக்கிரையாகியது சூழ்ச்சி செய்து சூதாட்டத்தில்

அவர்களை வென்றது என்று பல தீமைகளையும்செய்து அதனாலேயே இறுதியில் மாண்டு போனார்கள்.
முள்ளை முள்ளால் தான் எடுக்க முடியும்.
வைரத்தை வைரத்தால்தான் அறுக்க முடியும்.
கொல்லை புற வழியாக ஓடும் திருடனை பிடிக்க நீங்களும் கொல்லைபுற வழியாகத்தான் ஓட வேண்டும்.
இது போலவே தொடர்ந்து தவறான வழியிலேயே சென்று கொண்டிருந்த கௌரவர்களிடமிருந்து பாண்டவர்களை பாதுகாக்கவும் அவர்களுக்கு உரிய ராஜ்ஜியத்தை பெற்று தரவும்  பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் அது போன்ற வழியிலேயே சில நேரங்களில் செல்லும் படி ஆயிற்று.ஆனால் அதில் எந்த ஒரு சுயநலமும் இல்லை.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ணர் அஸ்வத்தாமா அதஹ என்று தர்மராஜாவை பொய் சொல்ல சொன்னாரே.
அதனை கேட்டு தானே துரோணாச்சாரியார் உயிர் விட்டார்.இது சரியா.

ஸ்வாமியின் பதில்:
உங்களுக்கு உண்மை தெரியாததால் இப்படி கேட்கிறீர்கள்.ஸ்ரீ கிருஷ்ணர் மீதோ தர்மராஜா மீதோ எந்த தவறும் இல்லை.
துரோணாச்சாரியாருடைய தவறால் தான் அவர் உயிர் விடும்படி ஆயிற்று.அஸ்வத்தாமா ஹதஹ என்று சத்தமாக சொன்ன தர்மராஜா குஞ்சரஹ அதாவது அஸ்வத்தாமா என்ற யானை என்பதை மெதுவாகாவும் சொன்னார்.அதை சரியாக கேட்டுக் கொள்ளாத துரோணாச்சாரியார் இறந்தது தன் மகன்தான் என தவறாக புரிந்து கொண்டு உயிரை விட்டார். தன்னுடைய மைந்தன் பால் அவர் கொண்டிருந்த அளவுக்கு அதிகமான பாசமே அவர் உயிரை பறித்தது.அது மட்டுமல்ல.
ஒரு பிராமணராக பிறந்தும் தன்னுடைய ஸ்வதர்மா படி லோக க்ஷேமத்திற்காக பிரார்தித்துக் கொண்டே இருப்பதை விடுத்து போர் தொழிலை கைகொண்டதும் அவரது தவறாகும்.தவறான வழியில் துரியோதனன் செல்கிறான் என்பது நன்கு தெரிந்தும் நன்றி கடனுக்காக தன் மகனுக்கும் மேலாக நேசித்த அர்ஜுனனுக்கெதிராக போர் செய்ததும் அவருடைய தவறாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி மஹாபாரதத்தில் அபிமன்யு மற்றும் கடோத்கஜன் போன்ற இளம் வீரர்கள் கொல்லப்பட்டதன் காரணம் என்ன.தீய நடத்தை உடையவர்கள் கொல்லப்படுவதை புரிந்து கொள்ளலாம்.ஆனால் நன்னடத்தை கொண்ட இந்த இளம் வீரர்கள் ஏன் இறக்க வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
உங்கள் வீட்டில் கொசு தொல்லை இருந்தால் கொசு மருந்து அடிக்கிறீர்கள் அல்லவா.ஒனறிரண்டு கொசுக்கள் தான் உங்களை கடித்ததென்றாலும் மருந்து அடிக்கும்

போது அனைத்து கொசுக்களும் இறந்து விடுகின்றன.அது போல போர் என்று வந்து விட்டால் இரண்டு பக்கமும் சில நல்லவர்களும் இறக்கத்தான் செய்வார்கள்.
இது இயற்கையானதே.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி பத்ம வியூகத்தை உடைத்து வெளியே வர அர்ஜுனுக்கு மட்டுமே தெரியும் என்றும் அது தெரியாததால்தான் அபிமன்யு மாண்டான் என்றும் அவன் கருவிலிருக்கும் போது பத்மவியூகத்தை பற்றி நாரதர் சொல்லி வந்ததை கேட்டதாகவும் பாதியில் ஸ்ரீ கிருஷ்ணர் வந்து நாரதரை சொல்ல விடாமல் தடுத்ததால் பத்மவியூகத்தை விட்டு வெளியேறுவதை அபிமன்யு தெரிந்து கொள்ள முடியாமல் போனது என்று கூற படுகிறதே.
இது உண்மை தானா ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
பண்டைய பாரத இலக்கியங்களில் பல ரகசியங்களும் புதிர்களும் நிறைந்துள்ளனர்.எளிதில் விளங்காத உள்ளார்ந்த அர்த்தங்கள் பல உள்ளன.அவை மனிதன் கடைபிடிக்க வேண்டிய கடமை,பொறுப்பு, நன்னடத்தை இவைகளை எடுத்து காட்டுகின்றன.
அவைகள் உங்களுடைய தவறுகளையும் சுட்டி காட்டி நீங்கள் திருந்துவதற்கும் அதன் மூலம் தெய்வீகத்தை உணர்வதற்கும் வாய்பளிக்கின்றன.இதிகாசங்களில் வருகின்ற நிகழ்வுகள் அனைத்தும் மனித குலத்திற்கு நல் வழியை காட்டுகின்றன.
அர்ஜுனன் பார்த்தா பல்குனா விஜயா என பல பட்டங்களை பெற்றிருந்தான்.
இந்த காலத்தில் தரப்படுகின்ற பத்மஸ்ரீ பத்மபூஷன் பட்டங்களை விட இவை மேலானவை.
இப்படி பல திறமை உடையவனாக இருந்தும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடத்தில் முழுவதுமாக சரணாகதி செய்து கொண்டிருந்தான்.இதுவே பத்மவியூகத்தை உடைத்து வெளியே வருகின்ற ஆற்றலை அவனுக்கு அளித்தது.
அர்ஜுனா என்றால் தூய்மை என்றே அர்த்தமாகும்.
அவனுடைய மனத்தூய்மையும் இதயத்தூய்மையும் தான் அவனுக்கு பெரும் ஆற்றல்களை பெற்று தந்தது.
ஆனால் அபிமன்யுவோ அனது மனைவி உத்ரா கருவுற்றிருந்த போது போருக்கு செல்ல வேண்டி நேரிட்டது.அவனுடைய தந்தை அர்ஜுனனும் மாமன் ஸ்ரீ கிருஷ்ணரும் போர்களத்தை விட்டு வெளியே சென்றிருந்தனர்.
அபிமன்யு தன் மனைவி மீது அதிக பாசம் கொண்டிருந்தான்.அதனால் ஏற்பட்ட கவன சிதறலே அவன் பத்ம வியூகத்தை விட்டு வெளியே வர முடியாமல் செய்து விட்டது.
இந்த உலகமே ஒரு பத்மவியூகம் தான்.ஆசைகள் மற்றும் பந்த பாசங்களிலிருந்து வெளி வர முடியாமல் மனிதன் மாட்டிக்கொள்கிறான்.அபிமன்யு என்றாலே எல்லாரிடத்தும் அபிமானம் அதாவது மிகுந்த பாசம் கொண்டவன் என பொருளாகும்.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி தரௌபதி மாயாசபையில் துரியோதனனை கேலி செய்ததாகவும் அதற்கு பழி தீர்க்கவே குருஷேத்திர போர் நிகழ்ந்ததாகவும் கூறப்படுகிறதே.அதனை பற்றி எங்களுக்கு தயவுசெய்து எடுத்து சொல்லுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
இது உண்மையல்ல.
நடந்தது என்ன என்று தெரியாதவர்கள் கூறி விட்டு போன கட்டு கதை இது.தரௌபதி மஹா ராணியாவார்.
அவர் எல்லாரிடத்தும் அன்புடனும் பண்புடனும் நடந்து கொள்பவர்.அன்று அவர் குளித்து தலையை அலங்கரித்து பணி பெண்களுடன் வந்து கொண்டிருந்தார்
அதே சமயம் துரியோதனன் மாளிகையை சுற்றி பார்த்து கொண்டே வந்தான்.ஓரிடத்தில் தண்ணீரை தரையென்று எண்ணி காலை வைத்தபோது துரியோதனன் தடுமாறி விழுந்தான்.
அதே சமயம் தௌரபதியும் அங்கே வர நேர்ந்தது.அப்போது கூட துரியோதனன் விழுந்ததை பார்த்து பணி பெண்கள் தான் சிரித்தார்களே தவிர தௌரபதி சிரிக்வில்லை.
துரியோதனன் தான் தரௌபதி தன்னை பரிகசிப்பதாக தவறாக புரிந்து கொணடான்.தவறு துரியோதனனுடையதுதான்.
தரௌபதி மேல் எந்த தவறும் இல்லை.அவர் மிகவும் மேன்மையானவர்.குரலை உயர்த்தி அதிர்ந்து பேச தெரியாதவர்.மன திருப்தி கொண்டவர்.பாண்டவர்களுக்கு சேவை செய்வதில் சோர்வடையாதவர்.அவர் துரியோதனன் மட்டுமல்ல வேறு யாரையும் பார்த்து பரிகசித்து சிரித்தார் என சொல்வது அறிவீனமாகும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் நம் ஸ்வாமியின் கிருஷ்ண சரிதத்தை மேலும் கேட்டு
மகிழலாம்.

ஜெய் சாயிராம்